# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்

வணிக மாத இதழ்

Volume: 14 | Issue : 06 | SEPTEMBER 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE










METRO
அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


GSTIN: 33ALZPD4776G1ZO
மல்லிகை
The Mart
GROCERY / TOYS / STATIONERY / GIFTS
Online Delivery : 9345910000
No. 198-A, South Masi Street, Madurai - 625001.


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Location - Google Map
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

அஸ்கிதெங்கோ மொன்னு பொரெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

கடந்த செப்., 3ம் தேதி நமது மத்திய அரசு தொழில் முனைவோர்கள், பொதுமக்களுக்கு தீபாவளிப் பரிசாக இன்பச் செய்தியை அறிவித்துள்ளது. அதுவே, ஜிஎஸ்டி., வரி சீர்திருத்தம் ஆகும். மக்கள் அன்றாட பயன்படுத்தும் பல்வேறு பொருட்களுக்கான வரியை குறைத்துள்ளது. மேலும், 4 விதமான வரி விகிதங்களை, 2 வரி விகிதங்களாக! குறைத்துள்ளது. இதனால், நாட்டில் பல்வேறு பொருட்களுக்கான விலை குறைய வாய்ப்பாக அமைந்துள்ளது. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சி என்று பலராலும் பாராட்டுப்பட்டு வருகிறது. நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ம், மத்திய அரசின் இந்த புதிய நடைமுறையை வரவேற்று, பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும், மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

பதினைந்தாவது துணை ஜனாதிபதியாக சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் பதவி ஏற்ற செய்தி தமிழகத்திற்கு சிறப்பு சேர்க்கிறது. ஏற்கனவே, சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் துணை ஜனாதிபதியாக பதவி வகித்தார். ஒரே பெயரைக் கொண்ட இருவர் அந்த பெருமைமிகு நாற்காலியில் அமர்வது என்பது அபூர்வம். அவரைப்போலவே இவரும் முன்னுதாரணமாக திகழ வாழ்த்துகள்.

இன்றும் நம்மில் பலரிடம், தொழில் வளர்ச்சிக்கு அளிக்கும் முக்கியத்துவம், விழிப்புணர்வு, சரியான திட்டமிடல் போன்றவை இருந்தாலும், நமது உடல் ஆரோக்கியம் மற்றும் குடும்பம் போன்றவற்றில் தொழிலுக்கு நிகராக கவனம் செலுத்துவது இல்லை என்று சில சமீபத்திய நிகழ்வுகளின் மூலம் தெரியவருகிறது.

உங்கள் உடல் ஆரோக்கியத்தில் அக்கரை செலுத்தும் விதமாக அவசியம் உடற்பயிற்சியை மேற்கொள்ளுங்கள். சத்தான உணவுகளையே எடுத்துக்கொள்ளுங்கள். இது நம் ஆயுளை நீட்டிக்கும், உடலுக்கு ஆரோக்கியத்தை அளிக்கும். இதுதவிர, எதிர்பாரா சம்பவங்கள் ஏற்பட்டால், மருத்துவ நிதிச் சுமையை சமாளிக்கவும், நம் குடும்பம் மற்றும் சந்ததிகளின் பாதுகாப்பிற்கு ஆயுள் மற்றும் மருத்துவ காப்பீடு செய்து கொள்வது மிக மிக அவசியம். ஆகவே, தொழிலோடு, நம் உடல் மற்றும் குடும்பத்தையும் கவனத்தில் கொண்டு விழிப்போடு செயல்பட நம் சேம்பர் உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**15.08.2025** – நமது நாட்டின் 79வது சுதந்திர தின விழா, நமது சேம்பர்-ல் கொண்டாடப்பட்டது. சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். சிறப்பு விருந்தினராக திரு. T.K. ராம்தாஸ் Sergeant, Indian Air Force அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. P.R. கிஷோர் குமார் Tamilnadu Police Traffic Warden அவர்களும் கலந்து கொண்டனர்.

**24.08.2025** – நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், அத்யாபகருமான மத்வஶ்ரீ கே.ஆர். ராமாச்சாரி அவர்களின் அவர்களின் பீமரத சாந்தி ஸப்ததி அப்த பூர்த்திக்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**31.08.2025** – சேம்பர்-ன் 6வது செயற்குழு கூட்டம் குற்றாலத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**02.09.2025** – சேம்பர்-ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம் தொழில் உயர்வோம் உயர்த்துவோம் என்கிற தலைப்பில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்புப் பேச்சாளராக திரு. P. குமரப்பன் Managing Director, VP CARKITZS அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

**10.09.2025** – அன்று மாலை, சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. B.V. குப்புராஜ் அவர்களின் இல்ல திருமண வரவேற்பில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

வருகிற 23.09.2025 அன்று காலை 10.45 மணிக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் அரங்கில் 18ம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற இருக்கிறது. அங்கத்தினர்கள் அனைவரும் கலந்து கொள்ள அழைக்கிறோம்.

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும், ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை மற்றும் இனிய தீபாவளித் திருநாளை ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்றி



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

மத்திய அரசு தீபாவளிப் பரிசாக வரலாற்றுச் சிறப்புமிக்க வரிச் சீர்திருத்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதனால், பொதுமக்கள், தொழில்முனைவோர்கள் பலர் பயனடைவார்கள். நாட்டில் விலைவாசியும் கட்டுப்பாட்டிற்கு வரும்.

ஜிஎஸ்டி வரி பற்றிய தகவல்களும், வரித்திருத்தத்திற்குப்பிறகு தொழில்முனைவோர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விபரங்களை இந்த இதழில் அளித்துள்ளோம். உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

நமது நாட்டின் துணை ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில், தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

மக்கள் பணியில் மக்கத்தான சேவைகளை செய்தவர். ஆன்மிக நெறிமிக்கவர் இன்று நம் நாட்டிற்கு துணை ஜனாதிபதி பொறுப்பேற்பது மிகுந்த பெருமையளிக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவரை தேர்தலில் மத்திய அரசு களம் காணச் செய்ததற்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்றோம்.

நன்றி

### திருக்குறள்

**அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை**

**பொருள்:** (அறம் செய்வதை ஒத்துப் போடக் கூடாது) பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு வைக்க எண்ணக் கூடாது. உடனே செய்ய வேண்டும் அப்படிச் செய்ததன் பலன் உடல் இறந்த பிறகும் உயிருக்கு உதவி செய்யும் துணையாகும்.

அதிகாரம் 04 அறன் வலியுறுத்தல் பாயிரம்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544


Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear, ANAND, Viking, Prithvi INNER WEARS, NAIDU HALL THE FAMILY STORE, JOCKEY INNER WEAR, Poomex, MANGAI NIGHTIES, RASATHE DARLING NIGHTIES, YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
THE BABY SHOP அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண், மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங், மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை – 625 012. செல் : 98941 41402




Best Compliments from

BVK GROUP

FINANCE | LAND | SUN | WIND

Shri. **Bala V Kutti**

*Chairman, BVK Group*

Indowind Energy Ltd
Indus Finance Ltd
EverOn Power Ltd
BeKae Props. P Ltd
BVK Foundation

603, Keshava, BKC,
Mumbai - 400 051.
Kothari Building 4th Floor,
114, M.G. Road,Nungambakkam,
Chennai - 600 034.





GUEST HOUSE
AVAILABLE ON RENT

@ COURTALLAM

BeKae Props. P Ltd

No.162, Courtallanather Main Road, Courtallam.
(Opp to Sri Parasakathi College for Women)

DAILY & WEEKLY BASIS | SINGLE / DOUBLE Rooms with Hall

Contact: S.Kumar 98849 19918

(பதிவு எண்: 26/2007)

# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

161F, சாலை பிள்ளையார் கோவில் தெரு, காமராஜர் சாலை, மதுரை - 625 009.
போன்: 262 99 55, 93441 97952, மின்னஞ்சல்: sourashtra.chamber@gmail.com
இணையதள முகவரி: www.sourashtrachamber.com

பெறுநர்: **தேதி: 01.09.2025**

அனைத்து உறுப்பினர்கள்

## வருடாந்திர பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பு

நமது சேம்பரின் **பதினெட்டாம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்** வருகின்ற 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணிக்கு மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்** அரங்கில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். அவ்வமயம் கீழ்கண்ட விஷயங்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம் :-

1. 31.3.2025-ம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்குழுவின் அறிக்கை சமர்ப்பித்தல் - பொதுச் செயலாளர்

2. 2024-25ம் ஆண்டுக்கான தணிக்கையாளர் அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பெற்ற வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தல் - பொருளாளர்

3. 2025-2026 ஆம் ஆண்டிற்கு தணிக்கையாளரை நியமித்து அவரது கட்டணத்தை நிர்ணயித்தல்.

4. 31.03.2025 வரை உள்ள அங்கத்தினர்கள் பட்டியல் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல்.

5. இதர விஷயங்கள், தலைவரின் அனுமதியுடன்.

K.K. **தினேஷ்**
தலைவர்

A.B. **குமரேஷ் பாபு**
பொதுச் செயலாளர்

மதிய உணவு 12.30 மணிக்கு

# தொழிலில் உயர்வோம் உயர்த்துவோம்



## மாதாந்திர தொழில் வர்த்தக நிகழ்ச்சி

**திரு. P. குமரப்பன்,** Managing Director, VP CARKITZS சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டு மேற்கண்ட தலைப்பில் உரையாற்றினார்.




ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம் கடந்த 02.09.2025 அன்று மாலை சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. தொழிலில் உயர்வோம் உயர்த்துவோம் என்கிற தலைப்பில் சிறப்புப் பேச்சாளராக திரு. P. குமரப்பன் அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்களின் தலைமையில் இந்த தொழில் வர்த்தக கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். வரவேற்புரையில், சமீபத்திய சில அனுபவங்களின் அடிப்படையில், ஆயுள் காப்பீட்டின் அவசியம் குறித்துப் பேசினார். நம் தொழில்முனைவோர்கள், அனைவரும், அவசியம், தங்கள் குடும்பத்திற்கு ஆயுள் காப்பீடு மற்றும் தொழிலுக்கான காப்பீடுகளை செய்துகொள்ள வழியுறுத்தினார்.

சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.K. சிவநாத் பாபு அவர்கள் சிறப்புப் பேச்சாளரை அறிமுகம் செய்தார். அதனையேற்று திரு. P. குமரப்பன் அவர்கள் தனது உரையைத் தொடங்கினார்.

தொழிலில் உயர்வோம் உயர்த்துவோம் என்கிற தலைப்பிற்கிணங்க, முதலில், நமது தொழிலில் எவ்வாறு உயர்வது என்பதற்கான 7 காரணிகளைக் கூறி அதற்கு மிக அருமையாக விளக்கமும் அளித்தார்.

நம்பிக்கை என்பது வேறு, நம்பகத்தன்மை என்பது வேறு, நமது தயாரிப்புகளைப் பற்றி நம்பகத்தன்மையை வாடிக்கையாளர்களிடத்தில் ஏற்படுத்துதல் என்றும், நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியம். இது நிர்வாகத்தை சீராக்கவும், வளர்ச்சிக்கும் உதவும் என்றும் தெரிவித்தார்.

மேலும், எந்த சூழலிலும், எந்தவிதத்திலும் பொறுமையிழந்து செயல்படுதல் கூடாது. வாடிக்கையாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகத்தையும் சரியாகக் கையாளுதல் அவசியம் என்றார்.

நேர்மையுடன், முதிர்ச்சியுடன் வாடிக்கையாளரின் தேவையறிந்து செயல்படுதல் போன்ற காரணிகள் நம் தொழிலை உயர்வுக்குக் கொண்டு செல்லும் என்று தெரிவித்து, தொழிலில், உயர்த்துவோம் என்ற தலைப்பிற்கிணங்க 7 காரணிகளை தெரிவித்து மிக அருமையான விளக்கத்தை அளித்தார்.

சிறப்புப் பேச்சாளரின் உரைக்குப்பிறகு, கலந்து கொண்ட அங்கத்தினர்கள் பலர் தங்களின் சந்தேகங்களை எழுப்பினர். அதற்கு மிகச்சிறப்பாக தமது சரியான பதில்களை அளித்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக, சிறப்புப் பேச்சாளரை கௌரவித்து நினைவுப்பரிசு வழங்கியது.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.




JC கணேசன் மருத்துவமனை
NABH Accredited
அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை - 7
98421 03579, 98427 03579, 97886 03579
jcganesan@gmail.com , Facebook.com/jcortho

Dr. J.C. GANESAN
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)

Dr. MALARKODI GANESAN
MBBS., DGO, DNB(org)

சிறப்பு சிகிச்சை முறைகள்

- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்ப்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை

இன்சூரன்ஸ் வசதி
மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மென்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்

# குறைக்கடத்தி என்றால் என்ன? எதற்கு பயன்படுகிறது?
# இதனை உற்பத்தி செய்ய நம் நாடு ஏன் கவனம் செலுத்துகிறது?




**குறைக்கடத்தி ( செமிகண்டக்டர் ) என்றால் என்ன?**

குறைக்கடத்தி (Semi-conductor) என்பது மற்ற காரணிகளைப் பொறுத்து மின் கடத்தி அல்லது கடத்தாப் பொருளாகச் செயல்படக்கூடிய ஒரு பொருளாகும். இது கணினிகள் மற்றும் பிற மின்னணு சாதனங்களுக்கு அடித்தளமாகச் செயல்பட உதவுகிறது. குறைக்கடத்தி என்ற சொல் இப்போது ஒருங்கிணைந்த சுற்றுகளுடன் பரவலாக தொடர்புடையது.

மின்சாரத்தை கடத்தக்கூடிய ஒரு பொருள் கடத்தி என்றும், மின்சாரத்தை கடத்த முடியாத ஒரு பொருள் மின்கடத்தி என்றும் அழைக்கப்படுகிறது. குறைக்கடத்திகள் கடத்திக்கும் மின்கடத்திக்கும் இடையில் அமர்ந்திருக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன. ஒரு டையோடு, ஒருங்கிணைந்த சுற்று ... மற்று; டிரான்சிஸ்டர் அனைத்தும் குறைக்கடத்திகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

எளிமையான சொற்களில், குறைக்கடத்தி என்பது மின்சாரத்தால் இயக்கவும் அணைக்கவும் கூடிய ஒரு மின் சுவிட்ச ஆகும். பெரும்பாலான நவீன தொழில்நுட்பங்கள் இந்த மில்லியன் கணக்கான சிறிய, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சுவிட்சுகளால் ஆனவை.

**குறைக்கடத்திகள் ஏன் முக்கியம்?**

குறைக்கடத்திகள் கிட்டத்தட்ட அனைத்து நவீன தொழில்நுட்பங்களிலும் பயன்படுகின்றன. எளிய கடிகாரங்கள் முதல் மேம்பட்ட சூப்பர் சோனிக் விமானங்கள் வரை, அனைத்தும் செயல்பட குறைக்கடத்திகளை நம்பியுள்ளன. சுத்தமான ஆற்றல் மாற்றமும் குறைக்கடத்திகளையே பெரிதும் சார்ந்துள்ளது. சூரிய பேனல்கள் அடிப்படையில் பெரிய குறைக்கடத்திகள். காற்றாலை மற்றும் மின்சார கார்கள் போன்ற பிற பசுமை ஆற்றல்களுக்கு அவற்றைக் கட்டுப்படுத்த குறைக்கடத்திகளை நம்பியுள்ளன.

இருப்பினும், குறைக்கடத்திகளை உருவாக்குவது எளிதானது அல்ல. இதற்கு மல்லியன் கணக்கான டாலர்கள் செலாவகும் மற்றும் உருவாக்க பல ஆண்டுகள் எடுக்கும். குறைக்கடத்தி ஃபேப்கள் எனப்படும் சிறப்பு தொழிற்சாலைகள் தேவைப்படுகின்றன. சிறியதாகவும் வேகமாகவும் இருக்கும் மிகவும் மேம்பட்ட குறைக்கடத்தி வேஃபர்களை உலகளவில் மூன்று முதல் ஐந்து தொழிற்சாலைகளில் மட்டுமே தயாரிக்க முடியும்.

**குறைகடத்தி தயாரிப்பில் கவனம் செலத்தும் நம் நாடு**

நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த பல்வேறு திட்டங்களையும், சீர்திருத்தங்களையும் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், தற்போது குறைகடத்தி தயாரிப்பிலும் நமது நாடு கவனம் செலுத்தி வருகிறது.

சமீபத்தில், செமிகான் இந்தியா 2025 என்ற மாநாட்டை பிரதமர் மோடி அவர்கள் தொடங்கி வைத்தார். அதில் அவர் பேசியதாவது;

20-ம் நூற்றாண்டைப் பொருத்தவரையில் நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் வளம்தான் அசைச்ச முடியா சக்தியாக இருந்து அதனை வடிவமைத்தது. ஆனால், 21-ம் நூற்றாண்டின் உண்மையான சக்தி செமிகண்டக்டர்கள் தான்.

கடந்த நூற்றாண்டில் உலகின் தலைவிதி எண்ணெய் கிணறுகளுடன் பிணைக்கப்பட்டிருந்தது. தற்போதைய நூற்றாண்டின் தலைவிதி என்பது சிறிய சிப்பில் குவிந்துள்ளது. அளவில் சிறியதாக இருந்தாலும் உலகின் முன்னேற்றத்தை வேகமாக இயக்கும் வலிமை அதில் பொதிந்துள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்படும் சிப் ஒரு நாள் உலகின் மிகப்பெரிய மாற்றத்துக்கான சக்தியை அளிக்கும்.

நாம் தாமதமாகத் தொடங்கினாலும் இப்போது நம்மை எதுவும் தடுக்க முடியாது என்பதே உண்மை. இந்தியாவை உலகம் தற்போது மதிக்கிறது. நம்புகிறது. இந்தியாவுடன் சேர்ந்து செமிகண்டக்டர் எதிர்காலத்தை உருவாக்க உலகம் தயாராக உள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**விக்ரம் - 32 சிப்**

விண்வெளிப் பயணங்களுக்காக முழுமையாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 32-பிட் மைக்ரோபிராசசர் ஆகும். இது ராக்கெட் ஏவுதல் மற்றும் விண்வெளி சூழல்களின் தீவிர தன்மைகளை தாங்கும் வகையில் சண்டிகரில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (இஸ்ரோ) செமிகண்டக்டர் ஆய்வகத்தால் வடிவமைப்பு செய்யப்பட்டது.

செமிகான் மாநாட்டின் போது, முற்றிலும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட இந்த விக்ரம்-32 பிட் சிப்-ஐ பிரதமர் மோடி அவர்கள் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் வழங்கினார்.

அப்போது, எண்ணெய் கருப்பு தங்கம் என்றால், செமிகண்டக்டர் ஒரு டிஜிட்டல் வைரம் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

सत्यमेव जयते

GST 2.0

# ஜிஎஸ்டி வரி – மாபெரும் சீர்திருத்தம்

## பொதுமக்கள், சிறுவணிகர்கள் பெரும் நிவாரணம்

சரக்கு மற்றும் சேவைகள் வரி (ஜிஎஸ்டி) கவுன்சிலின் 56வது கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து 5%,12%, 18%, 28% என நான்கு படிநிலைகளில் இருந்த ஜிஎஸ்டி வரிவிகிதங்கள், 5%, 18% என இரண்டு படிநிலைகளாக மாற்றப்பட்டுள்ளன. சொகுசுப் பொருட்களுக்கு 40% வரிவிதிப்பு இருக்கும். இந்த மாற்றங்கள் 2025 செப்டம்பர் 22 முதல் அமலுக்கு வருகின்றன.

ஜிஎஸ்டி வரி விகித மாற்றங்களால் உணவுப்பதனத் தொழில்துறை பெருமளவு பயனடைந்துள்ளது. இத்தகைய வரிக்குறைப்பால், உற்பத்தித் துறை ஊக்கம் பெறும். இதன் காரணமாக இத்துறையில் முதலீடு அதிகரித்து வேலைவாய்ப்பும் அதிகரிக்கம். மேலும், விவசாயிகள் மற்றும் உணவுப்பதன தொழில்துறையினரின் வருவாய் அதிகரிக்கும். சில்லறை விற்பனை விலை குறைவதால், தேவை அதிகரிப்பதோடு நுகர்வும் அதிகரிக்கும்.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டு 8 ஆண்டுகள் நிறைவானதையொட்டி, அதை மேலும் எளிமைப்படுத்தும் விதமாக, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் மீதான ஜிஎஸ்டி-யை குறைக்கும் வகையில் அடுத்த தலைமுறை சீர்திருத்தம் (ஜிஎஸ்டி 2.0) தீபாவளி பண்டிகைக்குள் மேற்கொள்ளப்படும் என சுதந்திர தின உரையில் பிரமர் மோடி அவர்கள் தெரிவித்தார்.

அதன்படி, நான்கு விகித ஜிஎஸ்டி-யில் 12%, 28% ஆகிய விகிதங்களை நீக்கிவிட்டு 5%, 18% ஆகிய இரு விகித நடைமுறையைப் பின்பற்றுவது, புகையிலை, குட்கா மற்றும் பான் மசாலா, உயர்ரக கார்கள் போன்ற பொருட்களுக்கு சிறப்பு 40% வரி விதிக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த வரி குறைப்பால், தினசரி பயன்பாடு உணவுப்பொருள்களுக்கு வரி விதிப்பு இல்லாத நிலை தொடரும். அதுபோல, அனைத்து வடிவிலான சப்பாத்தி, பரோட்டா உணவுப் பொருள்களுக்கு தற்போது விதிக்கப்படும் 5 சதவீத ஜிஎஸ்டி நீக்கப்பட்டு, வரி விதிப்பு இல்லாத வரம்பில் கொண்டு வரப்படும்.

பற்பசை, பால்பாட்டில், குடைகள், சைக்கிள், சீப்பு உள்ளிட்ட நுகர்வோர் பொருள்கள் 5 சதவீத ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. தற்போதைய 28 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக ஜிஎஸ்டி குறைக்கப்படுவதால் சிமெண்ட் விலை குறைய வாய்ப்புள்ளது. மின்சார வாகனங்களுக்கு தற்போதுள்ள 5 சதவீத ஜிஎஸ்டி தொடரும்.

| தினசரி அத்தியாவசிய பொருட்கள் | முன் | இனி |
|---|---|---|
| கூந்தல் எண்ணெய், ஷாம்பு, குளியல் சோப், டூத் பிரஷ் | 18% | 5% |
| வெண்ணெய், நெய், பால் பொருட்கள் | 12% | 5% |
| பாக்கெட் மிக்சர்கள் | 12% | 5% |
| பாத்திரங்கள் | 12% | 5% |
| குழந்தைகளுக்கான உணவு பாட்டில்கள், நாப்கின்கள், டயபர்கள் | 12% | 5% |
| தையல் இயந்திரங்கள், பாகங்கள் | 12% | 5% |
| மருத்துவத் துறை | முன் | இனி |
| தனிநபர் மருத்துவம் மற்றும் ஆயுள் காப்பீடு | 18% | 0% |
| தெர்மாமீட்டர் | 18% | 5% |
| மருத்துவ ஆக்சிஜன் | 12% | 5% |
| மருத்துவ பரிசோதனை கருவிகள் | 12% | 5% |
| மூக்குக் கண்ணாடிகள் | 12% | 5% |
| மின்னணுப் பொருட்கள் | முன் | இனி |
| குளிர்சாதனங்கள் | 28% | 18% |
| டிவி (32 இன்ச் மேல், எல்இடி,எல்சிடி உள்பட) | 28% | 18% |
| மானி ட்டர்கள், புரஜெக்டர்கள் | 28% | 18% |
| பாத்திரம் கழுவும் இயந்திரங்கள் | 28% | 18% |
| ஆட்டோமொபைல் | முன் | இனி |
| பெட்ரோல், பெட்ரோல் ஹைப்ரிட், எல்பிஜி, சிஎன்ஜி கார்கள்(1200சிசி உட்பட்டவை) | 28% | 18% |
| டீசல், டீசல் ஹைபிரிட் கார்கள் ( 1500சிசி உட்பட்டவை) | 28% | 18% |
| மூன்று சக்கர வாகனங்கள் | 28% | 18% |
| மோட்டார் சைக்கிள்கள் (350சிசி & அதற்கு குறைந்தவை) | 28% | 18% |
| சரக்குப் போக்குவரத்து வாகனங்கள் | 28% | 18% |
| வேளாண்மை | முன் | இனி |
| டிராக்டர்கள் டயர்கள், பாகங்கள் | 18% | 5% |
| டிராக்டர்கள் | 12% | 5% |
| குறிப்பிட்ட உயிரி பூச்சிக்கொல்லிகள், நுண் ஊட்டச்சத்துகள் | 12% | 5% |
| கல்வி | முன் | இனி |
| வரைபடங்கள், சார்ட்டுகள், உலக உருண்டை | 12% | 0% |
| பென்சில்கள், ஷார்ப்னர்கள், கிரெயான்கள், மெழுகு கிரெயான்கள் | 12% | 0% |
| பயிற்சிப் புத்தகங்கள், நோட்டுகள் | 12% | 0% |
| அழிப்பான்கள் (எரேசர்) | 5% | 0% |

## Section 14. Change in rate of tax in respect of supply of goods or services.-

To figure out which rate you need to use, check when the goods or services were supplied, when the invoice was made, and when payment is received. Basis the time of supply, the applicable tax rate will be decided.

| S. No. | Scenario | Supply Date | Invoice Date | Payment Dt. | Time of Supply | Tax Rate Applicable |
|---|---|---|---|---|---|---|
| 1 | If Supply is before rate Change:<br>Invoice & Payment both after rate change | Before rate Change | After rate Change | After rate Change | Earlier of Invoice or Payment Date | New rate |
| 2 | If Supply is before rate Change:<br>Invoice & Payment both after rate change | Before rate Change | Before rate Change | After rate Change | Date of Invoice | Old rate |
| 3 | If Supply is before rate Change:<br>Invoice & Payment both after rate change | Before rate Change | After rate Change | Before rate Change | Date of Payment | Old rate |
| 4 | If Supply is before rate Change:<br>Invoice & Payment both after rate change | After rate Change | Before rate Change | After rate Change | Date of Payment | New rate |
| 5 | If Supply is before rate Change:<br>Invoice & Payment both after rate change | After rate Change | Before rate Change | Before rate Change | Earlier of Invoice or Payment Date | Old rate |
| 6 | If Supply is before rate Change:<br>Invoice & Payment both after rate change | After rate Change | After rate Change | Before rate Change | Date of Invoice | New rate |

**Notes:**

1. "The date of receipt of payment" shall be the date on which the payment is entered in the books of account of the supplier or the date on which the payment is credited to his bank account, whichever is earlier.

2. If payment is credited to the supplier's bank account after 4 working days from the date of rate change, the date of credit is considered for "date of payment".

# விற்காமல் ஸ்டாக்கில் உள்ள பொருட்களுக்கு புது எம்.ஆர்.பி., லேபிள் ஒட்ட மத்திய அரசு உத்தரவு

## ஜி.எஸ்.டி., குறைப்பின் பலன் மக்களை சேர நடவடிக்கை

ஜி.எஸ்.டி., குறைக்கப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, விற்கப்படாத பொருட்களின் விலையை குறைத்து, புதிய எம்.ஆர்.பி., லேபிள் ஒட்ட வேண்டும் என உற்பத்தியாளர்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

புதிய ஜி.எஸ்.டி., நடைமுறை வரும் 22ம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வருகிறது. இதன்படி, பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி குறைக்கப்பட்டுள்ளது. இந்த பயன் மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் விதமாக, வர்த்தகர்கள் வரி குறைப்புக்கு ஏற்றவாறு விலையை மாற்றியமைக்க, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் பிரஹலாத் ஜோஷி தெரிவித்ததாவது:

உற்பத்தியாளர்களும், இறக்குமதியாளர்களும், விற்கப்படாத பொருட்களின் எம்.ஆர்.பி.,யை புதிய ஜி.எஸ்.டி.,க்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும். ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, பேக்கேஜிங் செய்யப்பட்டுள்ள இந்த பொருட்களை விற்க, நடப்பாண்டு இறுதி வரை கால அவகாசம் வழங்கப்படும்.

இந்த விலை திருத்தம் ஜி.எஸ்.டி., குறைப்பை மட்டுமே பிரதிபலிக்க வேண்டும். இதை பயன்படுத்தி பொருட்களின் விலையை உயர்த்தக் கூடாது. ஏற்கனவே பேக்கிங் செய்யப்பட்டுள்ள பொருட்களில் ஒட்டப்பட்டுள்ள எம்.ஆர்.பி., யை மறைக்கக் கூடாது. இதற்கு அருகில் புதிய எம்.ஆர்.பி., ஸ்டிக்கர் அல்லது முத்திரையை காட்சிப்படுத்த வேண்டும்.

இந்த விலை திருத்தம் தொடர்பாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செய்தித்தாள்களில், குறைந்தபட்சம் இரண்டு விளம்பரங்களை வெளியிட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Speed Post

I-10/14/2020-W&M
Government of India
Ministry of Consumer Affairs, Food and Public Distribution
Department of Consumer Affairs
Weights and Measures Unit
Krishi Bhawan, New Delhi-110001
Dated: 09.09.2025

To,

1. The Principal Secretaries,
   (I/c Legal Metrology)
   All States/ UTs

2. The Controllers of Legal Metrology
   All States/UTs

**Subject:** Permission to the manufacturers or packers or importers of pre-packaged commodities to declare the revised retail sale price (MRP) on the unsold stock – Change in GST rates of Goods & Services - reg.

Sir,

The undersigned is directed to refer to the above mentioned subject and to state that in exercise of the powers conferred by Rule 33 of the Legal Metrology (Packaged Commodities) Rules, 2011 the central government hereby permits the manufacturers or packers or importers of pre-packaged commodities to declare the revised retail sale price (MRP) on the unsold stock manufactured /packed / imported prior to revision of GST, after inclusion of the applicable/ increased amount of tax or after reducing the reduced amount of tax due to change in GST, if any, in addition to the existing retail sale price (MRP) upto 31st December, 2025 or till such date the stock is exhausted, whichever is earlier. Declaration of the changed retail sale price (MRP) shall be made by way of stamping or putting sticker or online printing, as the case may be, after complying with the following conditions:

(i) The original MRP shall continue to be displayed and the revised price shall not overwrite on it.

(ii) The difference between the retail sale price originally printed on the package and the revised price shall not, in any case, be higher than the extent of increase in the tax, if any, or in the case of imposition of fresh tax, such fresh tax, on account of implementation of GST Act and Rules. In the case of reduction of tax, the revised price shall not, in any case, be higher than the extent of price after reduction of tax, if any.

(iii) Manufacturers or packer or importers shall make atleast two advertisements in one or more newspapers in this regard and also by circulation of notices to the dealers and to the Director of Legal Metrology in the Central Government and Controllers of Legal Metrology in the States and Union Territories, indicating the change in the price of such packages.

2. It is also clarified that any packaging material or wrapper which could not be exhausted by the manufacturer or packer or importer prior to revision of GST, may be used for packing of material upto 31st December, 2025 or till such date the packing material or wrapper is exhausted, whichever is earlier, after making corrections required in retail sale price (MRP) on account of implementation of GST by way of stamping or putting sticker or online printing as the case may be.

Yours faithfully

(Ashutosh Agarwal)
Director, Legal Metrology
Phone: 011-23389489
Email: dirwm-ca@nic.in

**Copy to**: All industries/ industry associations/ e-commerce entities/ Stake holders.



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!
ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்
விஜயலெட்சுமி DTP& ஸ்கிரீன்
91506-00904, 99940-18805, 78128-19162
கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.
SINCE-1993 31 Years 01-07-1993 2023 SVLS
வெள்ளி விழா கண்ட நிறுவனம்
அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்
தினசரி & கட்டிங் மாத காலண்டர்
12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
தமிழ் டைரி ஆங்கில டைரி
30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை
பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
விபூதி கவர் 7 DAYS DELIVERY
சாமி படம் வுட்லேமினேசன்
ஸ்கூல் லேபிள்


நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!
Cell : 98421-18873,98428-18873
R.R. பாலகுமார்
R.R. குபேந்திரன்
R.R. பிரேம்குமார்
e.mail : svlsmadurai@gmail.com

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்புவது எப்படி?




மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கைகளை, துறை வாரியான நடவடிக்கைகள் என நாட்டின் குடிமக்கள் அறிந்து கொள்ள உரிமை பெற்ற தகவல்களை யார் வேண்டுமானாலும் கேட்டு அறிந்துகொள்ள வழிவகை செய்வதே தகவல் அறியும் உரிமைச் சட்டம்.

இந்தச் சட்டத்தின் கீழ், பதிவு செய்த குடிமக்கள், மத்திய, மாநில அரசுத் துறைகளுக்கு ஆன்லைன் மூலமே கேள்வி எழுப்பி தகவல்களைப் பெற முடியும்.

- ஆர்டிஐ தகவல்களைப் பெற ஏற்படுத்தப்பட்ட https://rtionline.gov.in இணையதளத்துக்குள் செல்லவும்.
- முதல் முறையாக இணையதளத்துக்கு செல்பவராக இருந்தால், உங்கள் அடையாளத்தைப் பதிவு செய்ய வேண்டும்.
- பெயர், முகவரி, தொடர்பு எண் மற்றும் சில விவரங்களை உள்ளிட்டு உங்களுக்கான கணக்கைத் தொடங்கலாம்.
- பிறகு, நீங்கள் எழுப்ப வேண்டிய கேள்வி யாருக்கு என்பதை தேர்வு செய்ய வேண்டும்.
- அமைச்சகமா? துறையா? நீதிமன்றம் போன்றவையா என்பதை தேர்வு செய்ய வேண்டும்.
- பிறகு, ஆன்லைன் ஆர்டிஐ விண்ணப்பத்தில் நீங்கள் கேட்கும் கேள்வியை பதிவு செய்யவும்.
- எந்த விவரத்தைக் கேட்கிறோம் என்பதை தெளிவாக உள்ளிடுவது மிகவும் அவசியம்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பும்போது, 3000 எழுத்துக்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும் எழுத்துகளும் எண்கள், சிறப்பு எழுத்துகளான - _ ( ) / @ : & \ % போன்றவை மட்டுமே இடம்பெறலாம்.

- சில கேள்விகளுக்கு ஆவணங்கள் ஏதேனும் இருப்பின் அதனையும் இணைக்கலாம்.
- வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பராக இருந்தால் ஆர்டிஐ கட்டணம் செலுத்தத் தேவையில்லை.
- வறுமைக் கோட்டுக்கு மேல் இருப்பராக இருந்தால் ஆர்டிஐ கட்டணம் செலுத்த வேண்டும்.

அதற்கு மேக் பேமெண்ட் என்பதைத் தேர்வு செய்து ஆன்லைன் மூலமாகவே பணம் செலுத்தலாம். இன்டர்நெட் பேங்கிங், கிரடிட் அல்லது டெபிட் கார்டு மூலமும் யுபிஐ மூலமும் பணம் செலுத்தலாம்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதும் உங்களது கேள்விக்கான பதிவு எண் உங்களுக்கு வழங்கப்படும். இது தொடர்பான உறுதிப்படுத்துதல் தகவல் மின்னஞ்சல் முகவரிக்கும், செல்போனில் குறுந்தகவலாகவும் வந்துவிடும். இந்தப் பதிவு எண்ணைக் கொண்டு, உங்கள் விண்ணப்பத்தின் நிலையை அறியலாம்.

ஆர்டிஐ விண்ணப்பத்தில் கொடுக்கப்படும் தொலைபேசி எண்ணுக்கு, பதில் கிடைப்பது குறித்த குறுந்தகவலும் அனுப்பிவைக்கப்படும்.

இதில், பல வகை உண்டு, அதாவது, ஒருவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் எழுப்பிய கேள்வி, பதிலளிக்கப்படாமல் அவருக்கே திருப்பி அனுப்பிவைக்கப்படும். ஏன் திருப்பி அனுப்பப்படுகிறது என்பதற்கான விளக்கம் கொடுக்கப்படும். அல்லது வேறொரு துறைக்கு அல்லது அமைச்சகத்துக்கு இந்த தகவல் அனுப்பிவைக்கப்படுவதாக இருந்தாலும் அது தொடர்பான தகவல் கிடைக்கப்பெறும்.

அவ்வாறு இல்லாமல், ஒருவர் கேட்ட கேள்வி, பல துறைகளிடமிருந்து பதில் பெறுவதாக இருந்தால், பல்வேறு துறைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது என்பதற்கான தகவல் வழங்கப்படும். இப்படிப்பட்ட விண்ணப்பங்கள் ஒருவேளை இரண்டு அல்லது மூன்று துறைகளுக்கு அனுப்பப்படுகிறது என்றால், மூன்று விண்ணப்ப எண்கள் வழங்கப்படும்.

இந்த துறைகளிடமிருந்து வரும் பதிலில், ஒரு துறையின் பதில் திருப்திகரமானதாக இல்லை என்றால், அந்த விண்ணப்பத்தின் எண்ணைக் குறிப்பிட்டு விண்ணபதாரர் மீண்டும் கேள்வி எழுப்பலாம்.

-தி இந்து(த)



# Now, companies don't need to match credit notes to invoices

The GST Council has provided a much-needed relief to businesses, especially FMCG players, as credit notes are no longer linked to the invoices, which complicates matters for companies and sellers down the line. Credit notes are common in business and are used down the chain for transactions - from the manufacturer to the wholesaler to the dealer and the retailer - for every transaction made by them. While businesses did not encounter any challenges in case the goods sold to the retailer, through the chain, the challenge was in the case of products where the shelf life is not very long. Take the case of toothpaste, for instance, which may have a shelf life of a year but remains unsold with the retailer for nine or 10 months and is returned to the company. In this case, the credit notes float via the entire chain.

The earlier rules required every credit note to be co-related with the invoice, which meant that billions of invoices and credit notes needed to be reconciled for a large company, like Hindustan Unilever or Colgate. Now, the rules have been changed to do away with the requirement to match the two documents.

"There will be no need in future to link credit notes to specific invoice numbers, removing a long-standing pain point for all businesses.

"Businesses have been representing since the beginning of GST that credit notes are issued for various reasons and it is essential that GST, being a business tax, aligns its provisions with business practices and not the other way round," said M S Mani, partner at consulting firm Deloitte. It also eases the compliance burden in the case of discounts. "Taxpayers across various sectors commonly issue commercial credit notes for reasons, such as post-sale discounts. With the proposed relaxation of the requirement to establish a prior agreement for discounts before or at the time of supply, taxpayers may now be eligible for reductions even when such discounts are given post the sale. T

his change enhances commercial flexibility and aligns with evolving business practices. Additional clarifications regarding the treatment of post-sale discounts are anticipated in an upcoming circular," PricewaterhouseCoopers said.

## பஞ்சுக்கு 11% இறக்குமதி வரி விலக்கு தொழில்துறையினர் வரவேற்பு

கடந்த சில ஆண்டுகளாக பஞ்சு இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட 11 சதவீத வரி உள்ளிட்ட பலர்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. முக்கிய மூலப்பொருளான பஞ்சு பற்றாக்குறையை சமாளிக்க உதவும் நோக்கத்தில் மத்திய அரசு கடந்த 2022 ஏப்ரல் முதல் செப். 30ம் தேதி வரை இறக்குமதி வரியில் இருந்து விலக்கு அளித்தது. தொழில்துறையினரின் கோரிக்கையை ஏற்று அக். 31ம் தேதி வரை சலுகை நீட்டிக்கப்பட்டது.

2024ம் ஆண்டு பிப்.20ம் தேதி முதல் நீண்ட இழை பருத்திக்கு மட்டும் வரியில் இருந்து விலக்கு அளித்தது. அனைத்து வகையான பஞ்சுக்கும் ஏப்ரல் 1ம் தேதி முதல் செப். 30ம் தேதி வரை வரி விலக்கு அளிக்க தொழில் அமைப்புகள் சார்பில் மத்திய அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. தற்போது மத்திய அரசு இக்கோரிக்கையை நிறைவேற்றியுள்ளது. இதற்கு பல்வேறு தொழில் அமைப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பும் இதனை வரவேற்று மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

## ஜாப் ஓர்க் - ஜிஎஸ்டி வரி 18% ஆக உயர்வு தொழில்துறையினர் அதிருப்தி

ஜாப் ஓர்க் பிரிவில் உள்ள சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு ஜி.எஸ்.டி., வரி 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளதற்கு தொழில் துறையினர் பலரை அதிருப்தி அடையச் செய்துள்ளது.

மத்திய அரசு எடுத்து வரும் பல்வேறு ஆக்கப்பூர்வமான சீர்திருத்த நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது என்றாலும், ஜாப் ஓர்க் பிரிவுக்கான வரியானது 18 சதவீதமாக உயர்த்தியுள்ளது தொழில்துறையினரை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொழில் முனைவோருக்கு நெருக்கடியை ஏற்படுத்தும்.

ஆகவே, 5 சதவீதமாக குறைக்கவும், அதற்கு செலுத்தும் வரியை திரும்ப பெற்றுக்கொள்ளும் சலுகை (இன்புட் டேக்ஸ் கிரெடிட்) வழங்க வேண்டும் என மத்திய அரசுக்கு தொழில் துறையினர் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இதனை மத்திய அரசு பரிசீலித்து ஜாப் ஓர்க் பரிவுக்கான வரியை குறைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.






# சுதந்திர தின விழா கொண்டாட்டம்

நாட்டின் 79வது சுதந்திர தின விழா கடந்த 15.08.2025 அன்று நமது ஸௌ. சேம்பர் அரங்கில் கொண்டாடப்பட்டது. சரியாக காலை 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். நாட்டுப்பண் பாடப்பட்ட பின் அனைவருக்கும் இனிப்பு மற்றும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதனையடுத்து, மக்கள் பணியில் ஈடுபட்டு வரும் இரண்டு முக்கியஸ்தர்களைக் கொண்டு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக, திரு. T.K. ராம்தாஸ் Sergeant, Indian Air Force அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. P.R. கிஷோர் குமார் Tamilnadu Police Traffic Warden அவர்களும் கலந்து கொண்டனர்.

சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றியுரையாற்றினார்




# ஸௌராஷ்ட்ர ஶ்ரீ விருது



ஸௌராஷ்ட்ர சமூக நலப்பேரவையின் 22வது ஆண்டு விழாவில் அமைப்பின் சார்பாக ஸௌராஷ்ட்ர சமூக சேவகர்கள் 12 பேருக்கு, ஸௌரஷ்ட்ரஶ்ரீ விருது வழங்கி கௌரவித்தது. அமைப்பின் நிர்வாகிகள், சமூக முக்கியஸ்தர்கள் மற்றும் சமூக மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**துணிப்பையை உபயோகிக்கப் பழகுங்கள்**

S.S.KISHORILAL
92445 00633
0452 - 3558788
SRB 100 YEARS SINCE 1901
PRIDE OF MADURAI
SINCE 1901
SRB SILKS HOUSE
Fashion Creators in Silk Sarees
402 LG Complex, K.K.Nagar, Madurai - 625 020. Opp Sundaram Park / Near UCO Bank

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

## முதல்முறை வேலைக்கு செல்பவர்களுக்கும் வேலை வழங்குபவர்களுக்கும் ஊக்கத்தொகை

### மத்திய அரசின் புதிய வேலைவாய்ப்புத் திட்டம்

மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் சார்பில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக வேலைவாய்ப்புடன் இணைந்து ஊக்கத் தொகை வழங்கும் வகையில் பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரதத்துக்கான வேலைவாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து தமிழகம் மற்றும் புதுச்சேரியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது.

பிரதமரின் வளர்ச்சியடைந்த வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் முதல்முறை வேலைக்கு செல்பவர்களுக்கு ரூ. 15 ஆயிரம் வரை ஊக்கத் தொகை வழங்கப்படுவதாக மத்திய தொழிலாளர் ஆணையர் ஸ்ரீநுதாரா அவர்கள் சென்னையில் ஜ.சி.எஃபி தொழிற்சாலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் விளக்கமளித்துள்ளார். அவர் கூறியதாவது;

இந்த திட்டத்தின் முதல்கட்டம் 2025 ஏப்.,-1ம் தேதி முதல் 2027 ஜூலை 31-ம் தேதி வரை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன்படி வருங்கால் வைப்பு நிதிக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் பதிவு செய்து முதன்முறையாக வேலைக்கு செல்பவர்களுக்கு ரூ. 15 ஆயிரம் வரை ஊக்கத்தொகை 2 தவணைகளாக வழங்கப்படுகிறது. அதேபோல், வேலை வழங்குபவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.

அதன்படி ரூ. 10 ஆயிரம் வரை ஊதியம் பெறும் ஊழியரை நியமித்தால், ரூ. 1000, ரூ. 20 ஆயிரம் வரை ஊழியரை நியமித்தால் ரூ. 2000, ரூ. 20 ஆயிரத்துக்கு மேல் ரூ. 1 லட்சம் வரை சம்பளம் பெறும் ஊழியரை நியமித்தால் ரூ. 3000 ஊக்கத்தொகை வேலை வழங்குபவருக்கு வழங்கப்படும் என்று அவர் கூறினார்.



## தொடர்ந்து உயரும் தங்கம் விலை தொடநடுங்கும் மக்கள் நிலை

### வரலாற்றில் புதிய உச்சம் தொட்ட தங்கம் விலை

தங்கம் விலை ஒரு கிராம் ரூ. 10 ஆயிரத்தைக் கடந்து புதிய வரலாற்று உச்சத்தைத் தொட்டுள்ளது. இது அத்தியாவசியத் தேவைக்காக நகை வாங்குவோரை மட்டுமின்றி ஆடம்பரத்துக்காக நகை வாங்குவோரையும் கூட அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது போல, வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப தங்கம் விலை அதிகரித்தும் குறைந்தும் வருகிறது. கடந்த 26ம் தேதி முதல் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிப்பு, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு சரிவு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. மேலும், அமெரிக்காவில் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதும் இந்தியாவில் தங்கம் விலை உயர்வதற்கு இன்னொரு காரணம். இதே நிலை தொடர்ந்தால் இன்னும் 10 முதல் 15 சதவீதம் வரை தங்கம் விலை உயரும் என்றும் கூறப்படுகிறது.

தங்கம், ஆடம்பரப்பொருள் என்பதைத் தாண்டி பாதுகாப்பான முதலீடு என்பதாலும் அதன் மீதான முதலீடு உலகம் முழுவதுமே பரவலாக இருக்கிறது. அதுவும் இந்தியாவில் தங்கம் வைத்திருப்பது அவசரத் தேவைக்கு கைகொடுக்கும் பொருளாகவும் உள்ளது.

2025 ஜனவரி 1-ம் தேதி தங்கம் ஒரு பவுன் ரூ. 57200க்கு விற்பனையானது நினைவுகூரத்தக்கது. கடந்து 8 மாதங்களில் சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு பவுனுக்கு ரூ. 22,840 வரை உயர்வைக் கண்டுள்ளது.

தங்கத்தின் விலை தற்போது உச்சத்தில் இருந்தாலும், நீண்ட கால முதலீட்டை விரும்புபவர்கள் தங்கம் வாங்கலாம். அது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான அடித்தளத்தை அமைக்கும்.

சமீபகாலங்களில், வெள்ளியில் முதலீடு அதிகரித்து வருகிறது. வெள்ளியில் செய்யும் முதலீடு நல்ல ரிட்டன் தருகிறது என்று சில நிதி ஆலோசகர்களின் கருத்தாக உள்ளது.



# அஜினோமோட்டோ

அஜினோமோட்டோ என்னும் ஒரு சுவை கூட்டும் உப்பு... அதை சர்க்கரை என்றும் சொல்லலாம்...! பொதுவாக எல்லா சீன வகை உணவுகளிலும் சுவை கூட்ட சேர்க்கப்படும் இந்த அஜினோமோட்டோ பற்றி நாம் என்ன அறிந்து வைத்திருக்கிறோம் என்றால்... அது லைட்டா தூவி விட்டால் டேஸ்ட் இல்லாத உணவு கூட ருசிக்கும். ஆனால் அதிகமாக பயன்படுத்தினால் முடி கொட்டும் அவ்வளவு தான் என்று... ஆனால் உண்மையில் இதன் வரலாற்றை அறிந்தால்?

அஜினோமோட்டோ என்பது நாம் நினைப்பதுபோல அது ஒரு கடல் உப்பின் பெயரல்ல... அது ஒரு கம்பெனியின் பெயர். ஜப்பானில் 1917ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்தின் பெயரே அதன் பொருளுக்கும் ஒட்டிக்கொண்டது. உண்மையில் இந்த உப்பின் பெயர் Monosodium Glutamate (MSG) என்பதாகும்.

இதனை மருத்துவ உலகில் Slow Killer என்கிறார்கள். ஜப்பான் தலைநகர் டோக்கியோ, சிவோவை தலைமையிடமாக கொண்டு கிகுனே இகெடா என்பவரால் 1917ல் இந்த அஜினோமோட்டோ தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது கடல் படுகைகளில் வளரும் ஒரு பூஞ்சை மற்றும் பாசி செடி (Sea Weed) வகைகளில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு வகை உப்பு தான் Monosodium ஆகும். முதலில் கிகுனே இகெடா, 1909ல் அவர் தனது வீட்டில் நடத்தி வந்த வைத்தியசாலையில் அதனை மருந்தாக பயன்படுத்தி வந்தார்.

பிறகு உணவுகளில் சேர்த்து அதில் ருசி கூட்டப்பட்டிருந்ததை அறிந்த பிறகு அதனை உபயோகித்து Seasoning, Cooking Oil, Sweetener, Amino Acids வரை தயாரித்து பின் Pharmaceutical துறையிலுரும் இந்த உப்பை அறிமுகம் செய்தார்.

முதலில் இது தயாரிக்கப்பட்ட விதம் என்னவோ உயர்தரமானதாக இருந்தது. ஆனால் 1917ல் அமெரிக்க நிறுவனத்தோடு கைகோர்த்து வியாபார நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலையில் Glutamate என்னும் செயற்கை அமிலத்தையும் அந்த Monosodium உப்போடு கலந்துவிட்டு வியாபாரத்தை அதிப்படுத்தினர்.

Glutamate என்பது ஒரு அடிமைப்படுத்தும் காரியமாகும். ஒருமுறை உண்டால் மீண்டும் மீண்டும் சுவைக்கத் தூண்டும் போதை பொருள் போன்றதொரு சுவையூக்கி ஆகும்.

முதலில் இந்த Glutamate-ஐ உபயோகித்து Articial Sweetener என்னும் Asparatame-ஐ தயாரித்து வந்தனர். பிறகு இதன் அபாயமறிந்து அமெரிக்காவில் தடை செய்துவிட்டனர். ஆனால் அதன் மறுரூபமே இந்த அஜினோமோட்டோ உப்பாகும். இன்றைய அவசர உலக சமையல் குறிப்புகளில் தவறாமல் இடம்பெறும் இந்த அஜினோமோட்டோ உப்பை பயன்படுத்தாத நாடுகளே இல்லை எனலாம். சாலையோர கடைகள் தொடங்கி மல்டிகுஷன் ரெஸ்ட்டாரன்ட் வரை... சென்னை முதல் நியூயார்க் வரை என எல்லா உணவகங்களிலும் இதனை ருசிகூட்ட பயன்படுத்தாதர்வகள் இல்லை. முன்பெல்லாம் சைனீஸ் வகை உணவுகளில் தான் அஜினோமோட்டோ தூவப்படும் என்ற மாயை போய் தமிழகத்தின் ரசம் வரை இதை தூவ ஆரம்பித்துவிட்டார்கள்.

சரி இதை நாம் வாங்கி பயன்படுத்த வேண்டாம் என நினைத்து புறக்கணித்தாலும் நாம் உபயோகிக்கும் அத்தனை வகையான பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்களிலும் இது மறைமுகமாக கலக்கப்பட்டுள்ளது. அது நாம் விரும்பியும் விரும்பாமலும் நம் நாவை அந்த சுவைக்கு அடிமைப்படுத்துகிறது. குறிப்பாகக் குழந்தைகள்... அவர்கள் உண்ணும் பாக்கெட் சிப்ஸ், கிரீம் பிஸ்கட், சாதாரண பிஸ்கட், நூடுல்ஸ், இன்ஸ்டன்ட் சூப், மசாலா ஜட்டங்கள், டின்னில் வரும் மீன், சிக்கன், ரெடிமேடு சப்பாத்தி, பரோட்டா, சமோசா, பப்ஸ், சாஸ் வகைகள், சோயா பொருட்கள், சாக்லெட்டுகள், KFC, Pizza, Maggi மற்றும் சில குளிர்பானங்கள் என எல்லாத்திலும் அஜினோமோட்டோ என்னும் MSG Slow Killer உண்டு. அதனால் தான் இந்த Lays, Kurkure வகையறாக்களை உண்ணும் நம் வாண்டுகள் அதற்கு அடிமையாகிறார்கள். உண்பதால் வரும் பின்விளைவுகள்:-

- முடி கொட்டுதல்
- Glutamate இரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகப்படுத்துவதால் அதிகமான பசி எடுக்கிறது. நாம் உணவை அடிக்கடி உண்ண உண்ண ஊளைச்சதை போடுகிறது. பிறகு அதை குறைப்பது மிக கடினம். உடல் எடை கூடினால் தானாக சுகரும் இதய நோயும் இலவசமாக வரும்.
- குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு இது கொடிய விஷமாகும். ஐந்து வயது குழந்தைகளுக்கு தீராத தலைவலியை உருவாக்கும்.
- நரம்பு மண்டலத்தில் அதீத உற்சாகத்தை உருவாக்கி பிறகு பயங்கரமான பலஹீனத்தை உண்டாக்கி விடும்.
- இருதய நோய்களாக அதிபயங்கர துடிப்பும் சிலநேரம் வலியும் உருவாக்கும்.
- முகத்தில் எந்நேரமும் ஒரு எரிச்சல் இருப்பது போலவே சிலர் உணருவார்கள், அரிப்பும் தோன்றும். சிலரது முகம் கருத்திருக்கும்.
- வழக்கமாக இரத்த கொதிப்பு, தைராய்டு, நீரிழிவு, ஆஸ்துமா, உணவு ஒவ்வாமை, அதீத வியர்வை சுரப்பினால் உண்டாகும் Dehydration என்னும் நீர்ச்சத்து குறைதல், கண்களில் ரெட்டினா குறைபாடு ஏற்படும்.
- இவை எல்லாம் ஒரு நாள் நம்மை புற்றுநோயிடம் இழுத்துச்செல்லும்.

ஆகவே அஜினோமோட்டோவை தவிர்ப்போம். உடல் நலம் காப்போம்.

*- தமிழ்நாடு இ-பேப்பர்.காம்*


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்



ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

டிரைவர்கள் தேவை (ஸௌராஷ்ட்ரர்களுக்கு முன்னுரிமை)

98430 72626
98425 72626

* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்



No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை - 9

# ஜி.எஸ்.டி. 2.0

# எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அஷ்டாவதானம்

மூதறிஞர் ராஜாஜி, "வண்டு, மலரில் தேன் எடுப்பது போல, எந்த வித வலியும் இல்லாமல், மக்களிடம் வரிவசூல் செய்வதே சிறந்த அரசாங்கத்தின் மாண்பு" என்று கூறி வந்தார். அந்த வகையில், பல ஆண்டுகள் நீண்ட ஆலோசனை மற்றும் ஆராய்ச்சிகளுக்குப் பின்னர் பிரகடனப் படுத்தப்பட்டது தான், ஜிஎஸ்டி.,

சரக்கு மற்றும் சேவை வரி தொடங்கப்பட்ட நாள், 01.07.2017, அன்று முதல், தொடர்ந்து தொழில் துறையினர்க்கு ஆக்கப் பூர்வமாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருந்து வருகிறது.

எட்டு ஆண்டுகளில், வரிவசூல் மாதத்திற்கு ரூ. 90000 கோடியில் ஆரம்பித்து, ரூ. 2 லட்சம் கோடிகளையும் தாண்டி உயர்ந்திருப்பது, ஜிஎஸ்டி.-யின் வெற்றியை பறைசாற்றுகிறது. 55 ஜிஎஸ்டி கௌன்சில் கூட்டங்கள் வரை நடந்து, அவற்றில் பல மாற்றங்கள், சலுகைகள், கணக்கு சமர்ப்பித்தலில் எளிமை போன்றவற்றை செயல்படுத்தி, ஒரே வரியில் சொல்வதானால் - வரியில், புதுமை புரட்சியைப் புகுத்தி சாதனை படைத்திருக்கிறது எனலாம். ஏப்ரல், 2025ல் உச்சகட்டமாக ரூ. 2,36,000 கோடிகள் வசூல் செய்திருப்பது சரித்திரம். இடையே, கொரோனா காலத்தில் சற்று குறைந்திருந்தது ஏற்புடையதே!.

ஜி.எஸ்.டி. வருவதற்கு முன்பு அலங்கோலமாக இருந்த பலமுனை வரி அமைப்பை, அரசாங்கம், அதிகாரிகள், வியாபாரிகள். பொதுமக்கள் என்ற நான்கு புள்ளிகளைக் கொண்டு, பொருளாதாரத்திற்கே அழகான கோலங்கள் போட்டிருக்கிறது ஜிஎஸ்டி என்றால் அது மிகையாகாது.

வரி ஏய்ப்பு கணிசமாக குறைந்திருப்பதால், அரசாங்கத்திற்கு சேர வேண்டிய பங்கு அதிகரித்திருக்கிறது. எனவே, அரசாங்கம், மக்களுக்கு அதனை திருப்பிக் கொடுக்க முடிவெடுத்து, தீபாவளி பரிசாக, 56வது ஜிஎஸ்டி., கௌன்சில் கூட்டத்தில் வரிவிகிதத்தை குறைத்து அறிவித்திருக்கிறது.

❶ 5, 12, 18, 28 சதவிகிதம் என நான்கு அடுக்குகளாக இருந்த வரிகள், 5% மற்றும் 18% என்று இரண்டே பிரிவுகளாக சுருக்கப்பட்டிருப்பது, இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. வரி சீர்திருத்தம் உச்சாணியைத் தொட்டிருப்பது, நமது நாட்டு வல்லுனர்களின் அர்ப்பணிப்பு மேலும் செயல்திறனை வெளிப்படுத்தியிருக்கிறது.

❷ இன்சூரன்ஸ் போன்ற சேவைகளுக்கு 18% வரி, முழுவதுமாக நீக்கப்பட்டிருப்பது, மக்களின், அதனை நோக்கிய அத்தியாவசியப் பயணத்தை துரிதப்படுத்தும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது. இதனால், நாட்டு மக்களின் வாழ்வாதாரம் உறுதி பெறும்.

❸ சீருடைகள் மற்றும் ஆயத்த ஆடைகளுக்கு பயன்படும் செயற்கை இழை, நூல்களுக்கு 18%, 12% போன்ற விகிதத்திலிருந்து, ஒரே சீராக 5% வரி என குறைத்திருப்பது, டெக்ஸ்டைல் துறையினருக்கு, ஜிஎஸ்டி கொண்டு வந்திருக்கும் பெருமைமிகு சீர் எனக்கொள்ளலாம்.

❹ அன்றாட வீட்டுஉபயோகப் பொருட்களுக்கும், 18/12 என இருந்த வரிகள், 5% ஆக்கியிருப்பது, மக்களின் மனநிலையை அரசாங்கம் உணர்ந்திருப்பதன் அடையாளமாகக் கருதலாம்.

❺ இன்றைய காலகட்டத்தில் தவிர்க்கமுடியாதது என்று ஆகிவிட்ட ஏசி, நான்கு சக்கர வாகனங்களுக்கு, ஜிஎஸ்டி 28% யிலிருந்து 18%க்கு கொண்டு வந்திருப்பது, நடுத்தர வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை.

❻ விவசாயத்திற்கும், பார்மசிக்கும் அளிக்கப்பட்டிருக்கும் வரிச்சலுகைகள், பாராட்டுக்குரியது. இதனால், அனைவரின் Health & Wealth பாதுகாக்கப்படும்.

❼ குறைக்கப்பட்ட வரிகள் பொதுமக்களுக்கு சரியான முறையில் போய் சேர வேண்டும் என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

❽ மொத்தத்தில், ஒவ்வொரு தனிமனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருக்க இடம் (கட்டுமான சலுகைகள்) ஆகிய மூன்றிற்கும் தந்திருக்கும் முக்கியத்துவம், பாமரனையும் பரவசப்படுத்தியிருக்கிறது.

எதிர்பார்ப்புகள் எப்போதும் முழுமை அடைவதில்லை. குடிசை தொழில் போன்று குறு தொழில் செய்வோர்களுக்கு ஜிஎஸ்டி-க்கு உள்ளே வரும் வரம்பு ரூ. 40 லட்சத்திலிருந்து ரூ. 80 லட்சத்திற்கும். சேவை வரி வரம்பு, ரூ. 20 லட்சத்திலிருந்து ரூ. 40 லட்சமாக அறிவித்திருந்தால் தொழில் துறையில் இருக்கும் மூத்த குடிமக்களும், புதிதாக தொழில் தொடங்கி இருக்கும் இளைய சமுதாயத்தினரும் பயன் அடைந்திருப்பார்கள். இதற்கான அறிவிப்பு கூடிய விரைவில் வரும் என்று ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

செப்டம்பர் 3ந் தேதி எடுக்கப்பட்ட முடிவு, பாரதம் பொருளாதாரத்தில் மூன்றாவது மிகப்பெரிய நாடு என்ற பயணத்தின் ஆரம்பம். அடுத்த கட்டமான, கலாமின் வல்லரசு என்ற கனவு நனவாகும் என்பது கண்கூடு.

*– வீரஜா*







National Council Meeting of Association of Small & Medium Newspaper of India (ASMINI) was held at Singarakonda, Addanki near Ongole, Andhra Pradesh. National President Mr. K.D. Chandola, General Secretary & Gujarat State President Shri. Shankar Khatira and our Past President and Chief editor of Laabh Samachar Sri. K.K.G. Prabhakaran and other members with families attended. Shri. Kondalrao, AP State President hosted the stay and food and tourism arrangements of the members. Memorandum submitted to Hon. Ministers Mr. Ashwini Vaishnaw and Dr. L. Murugan, Hon'ble Minister of Information and Broadcasting.

ஆந்திராவில் நடைபெற்ற தேசிய சிறு மற்றும் நடுத்தர பத்திரிக்கையாளர்கள் அமைப்பின் தேசிய கௌன்சில் கூட்டம் கடந்த செப்., 6ம் தேதி அன்று நடைபெற்றது. இந்த கௌன்சில் கூட்டத்தில், லாப் ஸமாச்சார் இதழின் சார்பாக, நம் இதழின் மூத்த ஆசிரியர் திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டார்.

கூட்டத்தில், நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்து பத்திரிக்கைத் துறையினர் கலந்து கொண்டனர். இந்த கூட்டம், அமைப்பின் தலைவர் திரு. சந்தூலா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், சமீபத்தில் தபால்துறை, கட்டணம் மற்றும் நடைமுறைகளில் பல்வேறு திருத்தங்களை கொண்டு வந்துள்ளது. அதில், மாதாந்திர இதழுக்கான சலுகைக் கட்டண நீக்கம் பற்றி மத்திய அரசு பரிசீலிக்கவும், மத்திய அரசின் விளம்பரங்கள், சிறு மற்றும் நடுத்தர பத்திரிக்கைகளுக்கும் வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

நமது லாப் ஸமாச்சார் இதழின் மூத்த ஆசிரியர், திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள், சிறு மற்றும் நடுத்தர பத்திரிக்கைத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு சமூக பாதுகாப்புக்கான சலுகைகள் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் மத்திய அரசிடம் கொண்டு செல்ல கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.




2025 ஆகஸ்ட் மாத லாப் ஸமாச்சார் இதழ், மதுரை மாநகராட்சியின், தலைமைப் பொறியாளர் திரு. B.V. பாபு அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் (இடமிருந்து வலம்) பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, தலைவர் திரு. K.K. தினேஷ், செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார், இதழ் ஒருங்கிணைப்பாளர் / ஆசிரியர் திரு. E.R.K. விக்னேஷ் பாபு மற்றும் சிறப்பு அழைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.







Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...



மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

VIGNESH GRAPHICS

All Kinds of Printing Solution



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

L.N.R. தாமோதரன் - 98431 71477

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.09.2025 / BPC MDU
Date of Publication 20th of Every Month

**Kuttuva Silicates (P) Ltd.,**

KSPL,Madurai

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

**வேல் மருத்துவமனை**

**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

VSOC — Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

VALE HOSPITAL

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*




***Official Publication:***
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com